# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.454/2016 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா–10 (PW–10) |
| **பெயர்** | :– | பாஸ்கரன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுன்திங்கள் 30 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

2, 3, 5 முதல் 15 எதிரிகள் தோன்றினர். 1, 4, 14 எதிரிகள் தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம், அம்மாப்பேட்டையில் வசிக்கிறேன். நான் காப்பீட்டு மதிப்பீட்டாளராக பணிபுரிகிறேன். என்னிடம் காட்டப்படும் பதிவு எண்.TN-30-AJ-4611 என்ற Hero Honda splender plus இருச் சக்கர வாகனம் சம்மந்தமான சேத மதிப்பீட்டு அறிக்கை என்னால் வழங்கப்பட்டது. இரும்பாலை காவல் நிலையத்தினர் கைபேசி மூலம் அழைத்ததால் நான் காவல் நிலையத்திற்கு சென்ற மேற்சொன்ன வாகனத்தை பார்வையிட்டு மதிப்பிட்டு அறிக்கை அளித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் 26.04.2016 ஆம் தேதியன்று மேற்சொன்ன வாகனத்தை பார்வையிட்டு மதிப்பிட்டேன். அந்த வாகனத்தில் காணப்பட்ட சேதங்கள் எப்போது யாரால் ஏற்படுத்தப்பட்டன என்று எனக்கு தெரியாது. நான் உண்மையிலேயே வாகனத்தை பார்த்து மதிப்பிட்டு அறிக்கை கொடுக்கவில்லை என்றும் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அறிக்கை கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.